Thirumalai Naicker Mahal

*701 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Thirumalai Naicker Mahal in Madurai is going to be declared as a protected monument by the Government ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையை, தமிழ் நாடு வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வரலாற்றுச் சின்னமாகப் பாதுகாக்க அரசு மேற்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. திருமலை நாயக்கர் அரண்மனையை வரலாற்றுச் சின்னமாக அறிவித்ததும், அதுபற்றி பொது மக்களுக்கு ஆட்சேபம் இருந்தால் தெரிவிக்கும்படியும் கோரும் அரசின் செய்தி, 1971ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 28ஆம் நாளிட்ட தமிழ் நாடு அரசிதழில் பகுதி 2, பிரிவு 3, பக்கம் 454இல் வந்துள்ளது. இது பற்றி மேற்கொண்டு நடவடிக்கைகள் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை இயக்குநருடன் கலந்துகொண்டு எடுக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இப்பொழுது திருமலை நாயக்கர் மஹாலில் நீதிமன்றம் இல்லாத காரணத்தினாலே ஜனங்கள் அங்கு போவதற்கு இடம் இல்லாமல் அந்த இடமே பழுதாகிவிடக்கூடிய அபாயம் இருக்கிறது. ஆகவே அங்கே ஜனங்கள் அதிகமாகப் போகக்கூடிய வகையில் மியூஸியம் போன்ற கலைப் பொருட்களை வைப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பொதுப்பணித் துறையின் கீழே இருக்கிறது. அதற்காக ஒரு சட்டம் கொண்டுவந்து தொல் பொருள் ஆராய்ச்சித் துறைக்கு மாற்றி அதற்குப் பிறகு தென் மாவட்டங்களிலே இருக்கின்ற எல்லாத் தொல் பொருள்களையும் அங்கு கொண்டுவந்து காட்சிப் பொருட்களாக வைக்க அந்த அரண்மனை மிக மிகப் பயன்படும். அதுவும் பொதுமக்களை ஈர்க்கத் தக்க ஒன்றாக அமையும்.

Medical Centres in Rural areas

*702 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to assist private sector to start Medical Centres in Rural areas ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : விவர அறிக்கை[a] ஒன்று சட்ட மன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, வெளிநாட்டிலே யிருக்கின்ற சில பாதிரிமார்கள் கிராமப்புறங்களிலே மருத்துவ மனைகள் தொடங்க வேண்டுமென்று விரும்பினுல் அதற்கு அரசு அனுமதி கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : வெளிநாட்டிலே இருக்கக்கூடிய பாதிரிமார்கள் இங்கே தொடங்க முடியாது. வெளிநாட்டிலேயிருந்து இங்கே வந்திருக்கின்ற பாதிரிமார்கள் மத்திய அரசின் அனுமதியோடு தொடங்கலாம். வெளிநாட்டிலேயிருக்கின்றவர்களுடைய ஆதரவோடு இங்கேயுள்ளவர்கள் மருத்துவ மனைகள் தொடங்கவேண்டுமானுல் அதற்கு தமிழக அரசு ஒத்துழைத்து மத்திய அரசின் அனுமதியைப் பெறலாம். ஆனுல் இங்கே இருக்கின்ற மூலக் கேள்வி உள்நாட்டிலிருக்கின்றவர்கள் கிராமங்களிலே மருத்துவ மனைகளைத் தொடங்குவது பற்றி.

திரு. எஸ். வடிவேல் : எந்த எந்த இடங்களிலே தனியார்களின் மருத்துவ மனைகள் நடைபெறுகின்றன. மத்திய அரசு அளித்துள்ள தொகை எவ்வளவு. . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் விவரங்கள் கேட் கிறீர்கள் . . . .

திரு. எஸ். வடிவேல் : சொல்லட்டுமே !

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சொல்லட்டுமே என்ருல் எப்படி ? கேள்வி கொள்கை பற்றியது. ஆனுல் விவரங்கள் கேட்டால் எப்படி ? நான் இந்தக் கேள்விக்கு அனுமதி மறுக்கிறேன்.

Employment opportunities for Medical Graduates

* 703 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the State Government has any proposal to give employment to all the Medical Graduates ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

---

[a] 645–646-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.